**வரையறுக்கப்பட்ட மாந்தை சோல்ட் கம்பனி – 2017/2018**

வரையறுக்கப்பட்ட மாந்தை சோல்ட் கம்பனியின் (“கம்பனி”) 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் இந்த அறிக்கை வெளியிடப்படுகின்றது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய

கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

2018 மார்ச் 31 ஆம் திகதியில் ரூபா 7,012,838 பெறுமதியான 1243.4 மெட்ரிக் தொன் உப்பு இருப்பிற்கான பற்றாக்குறை அவதானிக்கப்பட்டது. எனினும், இந்த இருப்பு பற்றாக்குறை தொடர்பாக விசாரணை நடாத்தப்பட்டு நிதிக்கூற்றுக்களில் அப்பற்றாக்குறை சீராக்கப்படுவதற்காக கம்பனியால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல்களினையும் சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லையும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

(ஆ) நான் அபிப்பிராயப்படுவதாவது:

- முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன்

இது வரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணகடகீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றன என்பதும்

- கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனி அதிகாரச் சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் இணங்கியுள்ளன என்பதும் ஆகும்.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 மார்ச் 31 ஆந் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான கம்பனியின் இலாபம் ரூபா 27,789,256 என்பதுடன் அதற்கு நேரொத்த முன்னைய வருடத்தின் இலாபம் ரூபா 33,516,078 ஆகும். எனவே மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 5,726,822 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. வருமானம் ரூபா 10,077,542 ஆல் குறைவடைந்தமை, நிர்வாகச் செலவுகள் ரூபா 4,236,220 ஆல் அதிகரித்தமை மற்றும் ஏனைய வருமானங்கள் ரூபா 7,242,292 ஆல் அதிகரித்தமை இவ் வீழ்ச்சிக்கான பிரதான காரணங்களாக இருந்தன.

### 3.2 விகிதாசார நிதிப் பகுப்பாய்வு

(அ) முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது கம்பனியின் மொத்த இலாப விகிதம் 3.67 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. நிகர இலாப விகிதம் முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது 2.54 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டிற்கான விற்பனைக் கிரயம் 3.58 சதவீதத்தால் அதிகரித்தமை மற்றும் நிர்வாகச் செலவுகள் மற்றும் விநியோகச் செலவுகள் அதிகரித்தமை என்பன இவ் வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக இருந்தன.

(ஆ) முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் இருப்பு பெருமளவில் அதிகரித்த காரணத்தினால் நடைமுறை விகிதம் 0.69 சதவீதத்தினால் உயர்வடைந்ததுடன் விரைவுச் சொத்து விகிதம் 0.13 சதவீதத்தினால் மட்டுமே உயர்வடைந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

மீளாய்வாண்டிற்காக கம்பனிக்கு நிறைவேற்றுப் பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தும் கம்பனியின் நடவடிக்கைகளில் அவர் ஈடுபடவில்லை. இருப்பினும் மீளாய்வாண்டிற்காக மாதச் சம்பளம் மற்றும் எரிபொருள் படிகள் உள்ளடங்கலாக மொத்தம் ரூபா 951,000 ஆன தொகையொன்று கம்பனியால் செலுத்தப்பட்டிருந்தது.

**4.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்**

2017 ஏப்ரல் மாதத்திலிருந்து 2018 மார்ச் மாதம் வரை சேவையாற்றிய நாட் சம்பளம் செலுத்தப்படும் ஊழியருக்கு வருகைப் பதிவேடு பராமரிக்கப்படாமல் ரூபா 9,309,222 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**4.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

ஒப்பந்தத்தின் பிரகாரம் உப்பை அனுப்புவதற்காக வழங்கப்பட்டிருந்த காலம் 60 நாட்கள் மட்டுமே என்பதுடன் மொத்தம் ரூபா 21,159,500 விற்பனைப் பெறுமதியான 2,115.95 மெட்ரிக் தொன் இரண்டாம் நிலை உப்பானது 3 மாதங்களிலிருந்து ஒரு வருடத்திற்கும் அதிகமான காலமாக ஆனையிறவு உப்புளங்களிலிருந்து அனுப்பப்பட்டிருக்கவில்லை.

**4.4. சொத்துக்கள் முகாமைத்துவம்**

ஆனையிறவு உப்பளங்களினால் நிலையான சொத்துப் பதிவேடு மற்றும் இருப்பு பதிவேடு என்பன முறையாகப் பேணப்பட்டிருக்கவில்லை.